**தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 26 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அமைச்சிற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 17,487.14 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 13,152.33 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சிற்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 4,334.81 மில்லியன் அல்லது 24.79 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 5,936.45 | 5,694.38 | 242.07 | 4.08 |
| மூலதனம் | 11,550.69 | 7,457.95 | 4,092.74 | 35.43 |
| மொத்தம் | **17,487.14** | **13,152.33** | **4,334.81** | **24.79** |

**2.2 வருமானக் கணக்குகள்**

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2016 ஆம் ஆண்டிற்காக 10.03.07.05 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 12.75 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 13.73 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தினை 7.69 சதவீதத்தால் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகைத்தல் | மிகைத்தல் மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.03..07.05 | 12.75 | 13.73 | 0.98 | 7.7 |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 10301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் மற்றும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியான எல்லை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 60.00 | 56.23 | 40.00 | 47.36 | 275.00 | 139.04 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 229.57 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/000/00/0002/0115/000 | 1.60 |
| 6000/000/00/0013/0072/000 | 44.58 |
| 6000/000/00/0016/0063/000 | 157.36 |
| 6000/000/00/0019/0015/000 | 26.03 |
| மொத்தம் | **229.57** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

பாதுகாப்பு அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகளைப் பேணாதிருத்தல்

அமைச்சினால் கீழே தரப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் இரண்டு பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | திணைக்கள (ஒதுக்கீட்டு அங்கீகாரம்) செலவுப் பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | - மேற்படி - |

**3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 யூலை 03 ஆந் திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அக்கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,644 மில்லியனாக இருந்தது.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டுக் முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 46.7 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 42 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழ் 23 விண்ணப்பப் படிவங்களின் மூலம் ரூபா 110.14 மில்லியன் நிதி ஏற்பாடு ஏனைய செலவு வியடங்களுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அவ்வாறு மாற்றப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 38.82 மில்லியன் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 1202 - எரிபொருள் செலவுகள் செலவு விடயத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 15 சதவீதமும் 1404 போக்குவரத்து செலவுகள் செலவு விடயத்திலிருந்து 10 சதவீத நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அச்செலவு விடயங்களிலிருந்து உரிய நிதி ஏற்பாட்டை சேமித்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களுக்காக போக்குவரத்துப் படியாக ரூபா 5.54 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அச் செலவுகள் 1401 போக்குவரத்துச் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அது 1003 ஏனைய படிகள் செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 03 செலவு விடயங்களின் செலவுகளை செலவுப் பேரேடு மற்றும் திறைசேரி கணனி அச்சுக் குறிப்புகளுடன் ஒப்பிடும் போது ரூபா 94.49 மில்லியன் தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அந்த வேறுபாட்டை மீளாய்வண்டின் இறுதி வரை சரிசெய்தமைக்கான சான்று காணக்காய்விற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் ஏடுகளின் பிரகாரம் 02 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் மொத்தத்திற்கும் திறைசேரி கணனி அச்சுக் குறிப்புக்களின் பிரகாரமான மீதிகளுக்குமிடையே ரூபா 2.54 மில்லியன் தொகையான வேறுபாடு

வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வேறுபாடுகளை மீளாய்வாண்டின் இறுதி வரை சரிசெய்வதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் பேணப்பட்டு வந்த 04 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளில் உள்ளடக்கப்பட்ட 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 12.40 மில்லியன் கூட்டு மொத்த வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 வருமானக் கணக்கு

அமைச்சின் செயலாளர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 10.03.07.05 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல், கணக்குகளைச் சமர்ப்பித்தல் ஆகிய கடமைப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ்வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) துவக்கு உத்தரவுப் பத்திரங்களை புதுப்பிக்காமையின் காரணமாக நிலுவையான உத்தரவுப் பத்திரக் கட்டணம் ரூபா 1.26 மில்லியனை உள்ளடக்கி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை வருமானம் ரூபா 2.58 மில்லியான இருந்தது. அந் நிலுவை வருமானங்களில் ரூபா 0.55 மில்லியானது 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வருகின்ற போதிலும் அந் நிலுவை வருமானங்களை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்ய அமைச்சிற்கு முடியாதிருந்தது.

(ஆ) துவக்கு மற்றும் வெடி பொருட்கள் சம்பந்தமாக அதிகாரச் சட்டங்களில் தரப்பட்டுள்ள கட்டளைகளின் பிரகாரம் அமைச்சினால் தற்பொழுது அமுல்படுத்தப்படுகின்ற 22 நடவடிக்கைகள் சம்பந்தமாக அனுமதிக்கப்பட்டுள்ள அல்லது அங்கீகரிக்கப்படக்கூடிய செயல் நடைமுறைக் கோவை அல்லது உள்ளக சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்குத் தெரிவிக்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 11 ஆந் திகதி PED/04/08/01/59 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 02 (i) ஆம் பந்தியின் பிரகாரம் பொருளாதார நிலைமையின் மாற்றங்களைக் கவனத்தில் கொண்டு ஏதாவது சேவைக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் 1996 இன் 22 ஆம் இலக்க துவக்கு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற துவக்கு உத்தரவுப் பத்திரக் கட்டணம் சம்பந்தமாக 2000 ஆம் ஆண்டின் பின்னர் எதுவித திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

10301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன் மீதிகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வருகின்ற ரூபா 5.23 மில்லியன் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை முடியாதிருந்தது.

## 3.7 நல்லாட்சியும் கணக்களிப் பொறுப்பும்

### வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், தேசிய பாதீட்டுத் திணைக்களம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு 2016 செப்தெம்பர் 21 ஆந் திகதி தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 03 பிரதான பிரிவுகளின் செலவு மதிப்பீடுகள் காட்டப்படாமை. மதிப்பீட்டை நடைமுறைச் சாத்தியமாக சமர்ப்பிக்காமை. குறிக்கோள்களின் பிரகாரம் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்காமை இலக்கிடப்பட்ட செயற்பாட்டுக் குறிகாட்டிகள் குறிப்பிடப்படாது செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) அமைச்சினை ஒரு தனி அலகாகக் கருதி அனைத்து அலகுகளினதும் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை 14 தொகுதிகளாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 02 தொகுதிகளின் மெய்மையாய்வுச் சபை அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சிற்குச் சொந்தமான வதிவிடத்தை முறைப்படியாக பொறுப்பேற்காது பாதுகாப்புச் செயலாளரின் உத்தியோகபூர்வ வதிவிடமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## 3.9 பொறுப்புக்களுக்கான கடப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதிப்பிரமாணம் 94(1) இலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 07 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 11.88 மில்லியன் கூட்டு மொத்த பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆட்களை இனங்காணல் செயலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு 2012 ஆம் ஆண்டின் போது இரண்டு தனியார் வங்கிகள் மற்றும் இரண்டு அரசாங்க வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட திரண்ட கடன் பணத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,808.28 மில்லியன் தொகையான கடன் மீதி ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3.10 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றினூடான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(4) | 12.31 | சேதங்கள் சம்பந்தமாக விசாரணைகள் நடாத்தி சேதங்கள் ஏற்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டக் கட்டிடத்திற்கு 2014 பெப்ரவரி 15 ஆந் திகதி ஏற்பட்ட திடீர் தீ சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகள் நடாத்தி முழுமையான ஒரு அறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணங்கள் 756, 757 மற்றும் 1647 (ஆ) | - | 2015 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டின் போதும் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்கள் சம்பந்தமாக வருடாந்த மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1645 (ஆ) (இ) மற்றும் 1646 | - | மீளாய்வாண்டின் போது அமைச்சிற்குச் சொந்தமான 155 குழாம் வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவனைகளும் மாதாந்த பொழிப்பு அறிக்கையும் மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 702(3) | - | அகுரேகொட செயற்திட்டத்தை தவிர்த்து அமைச்சினால் அபிவிருத்தி வேலைகள், வழங்கல்கள் மற்றும் கோவைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது நிருவாகச் சுற்றறிக்கை | | |
| | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்கள் சம்பந்தமான சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் நுகர்வு சம்பந்தமான பரிசோதனைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை இடம் பெற்றிருக்கவில்லை. |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை | | |
| | (i) வழிகாட்டிகள் 5.4.11 | - | வரி இன்வொயிஸ் இல்லாமல் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 2.19 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரிகள் 03 தனியார் கம்பனிகளுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) வழிகாட்டிகள் 5.4.12 | - | அரைவாசி பூர்த்தியாக்கப்பட்ட இராணுவ வீரர்களின் வதிவிடத்தை பூர்த்தி செய்யும் செயற்திட்டத்தின் மாதாந்தம் இடம்பெற்றுவருகின்றன கொடுப்பனவுகளில் பெறுமதி சேர் வரி அடிப்படையில் செலுத்தப்பட்ட வரி தொடர்பான விபரம் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிய அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| | (iii) வழிகாட்டி 8.9.1 | 96.73 | இராணுவ வீரர் அரை வதிவிட நிர்மாணம் சம்பந்தமாக மீளாய்வாண்டின் போது 08 வழங்குனர்களிடமிருந்து ரூபா 96.73 மில்லியன் பெறுமதியான கொள்வனவுகளுக்காக எழுத்து மூல உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) பிரிவுகள் 4.2.2. மற்றும் 4.2.3 | 1,128.12 | அமைச்சு பெறுகை நடவடிக்கைகளுக்குரிய பெறுகைச் செயற்பாடுகளுக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.11 உள்நாட்டு நிதிகளின் மூலம் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்**

**3.11.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) அகுரேகொட பாதுகாப்பு மையம் நிர்மாணிக்கும் செயற்திட்டம்

அகுரேகொட பாதுகாப்பு மையம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 25 பில்லியனான ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்த இச் செயற்திட்டத்தின் நோக்கெல்லையும் மதிப்பீடும் திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக அது ரூபா 53.29 பில்லியனாக மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்திருந்தது. இக்கிரய மதிப்பீட்டு திருத்தத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2016 ஒக்தோபர் 04 ஆந் திகதி கிடைத்திருந்தது. மீளாய்வாண்டிற்கு செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 5,546.27 மில்லியன் தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,893.65 மில்லியன் தொகை அல்லது 52 சதவீதமான அளவு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 ஒப்பந்தக்காரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கால நீடிப்புச் செய்யும் 09 உரித்துப் படிவங்களுக்காக ரூபா 222.88 மில்லியன் தொகையான மேலதிகப் பொறுப்புக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட 21 கொள்வனவு நடவடிக்கைகள் சம்பந்தமாக 244 நாட்களிலிருந்து 1081 நாட்கள் வரையான கால வீச்சுடைய தாமதங்கள் காணப்பட்டதுடன் நிர்மாணப் பொருட்களை வழங்குவதிலுள்ள சிக்கல்கள் மற்றும் அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதங்களின் அடிப்படையில் ஒட்டு மொத்த செயற்திட்டத்தின் நிர்மாணங்களில் தாமதம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆட்களை இனங்காணல் செயலகக் கட்டிட நிர்மாணம்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறிய செயற்திட்டத்திற்காக 03 வணிக வங்கிகளிடமிருந்து ரூபா 7,550 மில்லியன் கடன் பெறப்பட்டிருந்தது. உரிய கடனை மீளச் செலுத்துதல் 2015 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக மேலும் ரூபா 337.71 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க அரையாண்டு நீதியாகச் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணம் ரூபா 267.61 மில்லியனிலிருந்து ரூபா 278.87 மில்லியன் வரை கடன் தவணைப் பணம் ரூபா 11.26 மில்லியன் அதிகரித்திருந்ததுடன் மாதாந்த வட்டி சதவீதமானது 8.00 சதவீதத்திலிருந்து 13.12 சதவீதம் வரையான வீச்சில் அதிகரித்திருந்தது.

(ii) உள்நாட்டுக் கடன் பெறுதல் தொடர்பாக ரூபா 863.06 மில்லியன் வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது 1601 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடன் தவணைப் பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 557.73 மில்லியன் தொகை 3001 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அக்கடன் தவணைப்பணமும் வட்டியும் 2502 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) கட்டிடத்தின் உரிமையை ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைத்தலும் வாடகைப் பணத்தை அறவீடு செய்தலும் சம்பந்தமாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினால் கணிப்பீடு செய்யப்பட்ட உருவாக்குதல் கிரயம், நிர்மாணக் கிரயம், 30 ஆண்டுகள் வரையான காலத்துக்குள் செலுத்த வேண்டிய கடன் வட்டி, மூலதனமாக்கிய கிரயமும் புதுப்பித்தல் கிரயமும், பராமரிப்பு உடன்படிக்கை மற்றும் பராமரிப்பு பதவியணியினர் கிரயம், 50 ஆண்டுகள் வரையான தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் கிரயம், காணிக்கிரயம் என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 29,118 மில்லியன் தொகையான ஒட்டுமொத்த கிரயம் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு சதுர அடிக்காக 04 அடிப்படைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு கட்டணங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் பதவியணியினர் கிரயத்தைத் தவிர்த்து பராமரிப்புச் செலவாகிய ரூபா 11,597.31 மில்லியனை அடிப்படையாகக் கொண்டு ஒரு சதுர அடிக்கு ரூபா 37.65 ஆக கிரயம் கணிப்பீடு செய்யப்பட்டு அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கணக்காய்வுப் பரிசோதனை சந்தர்ப்பமாகிய 2016 நவம்பர் 24 ஆந் திகதி வரையும் தற்போது கட்டிடத்தை தோற்றுவித்த 05 நிறுவனங்களில் எந்தவொரு நிறுவனத்துடனும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள எந்த ஒரு நிறுவனத்தினாலும் மீளாய்வாண்டின் இறுதிவரை வாடகைப் பணம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி இராணுவத்தின் பராமரிப்பு பிரிவினால் இனங்காணப்பட்டிருந்த 26 நிர்மாணக் குறைபாடுகள் மின்சார முறைமைகள் தொடர்பான 17 குறைபாடுகள் சமிக்ஞை உபகரணங்கள் தொடர்பான 05 சிக்கல்கள் என்பன சம்பந்தமாக ஒப்பந்தக்காரருக்கும் மதியுரைக் கம்பனிக்கும் தெரியப்படுத்தி முறைப்படியாகப் பூர்த்திசெய்தல் அல்லது உரிய பிடித்துவைத்தல் பணத்திலிருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) உளவுத்துறை பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்புச் செயற்திட்டம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் மொத்த கிரய மதிப்பீடு ரூபா 1,192 மில்லியனாக இருந்த போதிலும் அது ரூபா 1,297.25 மில்லியன் வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதற்காக உரிய தரப்பினர்களிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்காக ரூபா 590.00 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 20.32 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 3.44 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) 2016 மே 25 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து பூச்சிய அடிப்படையிலான வரவுசெலவுத் திட்ட முறைமை அமுல்படுத்தப்பட்டு வருகின்றதாகவும் மூலதன செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஆண்டின் போதே முறையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் நிதிச் செயலாற்றலும் பௌதீகச் செயலாற்றலும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(iv) செயற்திட்டத்தின் பெறுகைத் திட்டத்தில் ரூபா 1,128.12 மில்லியன் தொகையான பெறுகைச் செயற்பாடு சம்பந்தமாக அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின்

4.2.2 மற்றும் 4.2.3 ஆம் வழிகாட்டிகளின் பிரகாரம் கால அட்டவணைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான மத்திய கால செலவுக் கட்டமைப்புக்குள் செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் தொலைத் தொடர்பு கோபுரத்தை நிறுவுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதம், நிலத்தை பரிசோதனை செய்வதிலுள்ள தாமதம் என்பவற்றின் காரணமாக தொலைத்தொடர்பு கோபுரத்தை நிர்மாணிக்கும் பெறுகை நடவடிக்கையும் தாமதமடைந்திருந்தது. அதன் காரணமாக மைக்ரோ போட்டி ஒலிபரப்பு தொடர்பாடல் முறைமையைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையும் தாமதமடைந்திருந்தது.

(vi) செயற்திட்டத்தின் ஒவ்வொரு நடவடிக்கைக்குமாக நிரந்தர காலக்கட்டமைப்பைத் தயாரித்து முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குமுறைப்படி தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைகளின் பிரகாரம் செயற்திடடம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பெறுமதி சேர் வரி தவிர்த்து ரூபா 34.22 மில்லியன் பெறுமதியான 22 மின் பிறப்பாக்கிகளில் 12 மின் பிறப்பாக்கிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் உரிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11.2 புதிய செயற்திட்ட பிரேரணைகளுக்காக நிதி ஏற்பாட்டை வழங்குதல்

அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 103.01.02.09.2502 செலவு விடயத்தின் கீழ் புதிய செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல்களின் மூலம் ரூபா 450.00 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 244 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.11.3 அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட நிதி ஏற்பாட்டை நீக்கி புதிய செயற்திட்டத்தை ஆரம்பித்தல்

மீள் நிரப்பக்கூடிய வெளிநாட்டு மானியமாக மெரிடயிம் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 8.50 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கடல்சார் பாதுகாப்பு இயலளவை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் பெயரிலான வேறு ஒரு செயற்திட்டத்திற்கு இந்நிதி ஏற்பாடு அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது.

### 3.12 வங்கிக் கணக்கு செயற்பாட்டின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 136,723 மொத்தப் பெறுமதியான 09 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் பேணப்பட்டு வந்த 02 வங்கி கணக்குகளைப் பரீட்சித்த போது 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்புபட்ட இனங்காணப்படாத 23 கொடுப்பனவுச் சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 246.71 மில்லியன் தொகையையும் இனங்காணப்படாத 19 பெறுவனவுச்

சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 0.41 மில்லியன் தொகையையும் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.13 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது இராணுவத்தினரின் அரைகுறையான வதிவிடயங்களைப் பூர்த்திசெய்யும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 194.80 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. செலவுப் பேரேட்டில் செய்யப்பட்ட பதிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை அச் செயற்திட்டத்திற்காக ரூபா 201.09 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை ரூபா 6.29 மில்லியனால் மிகைத்து அதிக செலவு இடம் பெற்றிருந்தது. அந்த அதிக செலவைத் தவிர்ப்பதற்காக அச் செலவு விடயத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 6.39 மில்லியன் தொகையான செலவு ஏனைய செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. அந்த மாற்றங்களைப் பதிவு செய்வதற்காக முறைப்படியான அதிகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.14 முகாமைத்துவ பலவீனங்கள்

நியதிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்கள் சம்பந்தமாக பேணப்பட்டு வந்த பதிவேட்டின் 2015 திசெம்பர் 31 மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பித்த வாகனப் பட்டியல்களின் பிரகாரம் தேசிய மாணவர் படையணியின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய 09 வாகனங்கள் அப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்தி தனியார் தரப்பினர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவதன் மூலம் உழைக்கின்ற பல்வேறு வருமானங்கள் அரச சார்பற்ற நலன்புரி நிதியத்திற்கு ‘‘செலவு’’ வைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக மீளாய்வாண்டின் போது கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் 16 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 2,549.74 மில்லியன் நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு பேணப்படுகின்ற நிதியம் தொடர்பான முழுமையான தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் முப்படைகளின் தளபதிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் போதும் அனைத்து நிறுவனங்களின் நிதிகளின் பயன்பாடு மற்றும் சேகரிக்கப்படுகின்ற வருமானங்களை திரட்டு நிதியத்திற்குச் செலவு வைத்தல் சம்பந்தமாக முறையான நடைமுறைகளைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் அச் செயற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.15 மனித வள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 51 | 43 | 08 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 10 | 06 | 04 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 230 | 148 | 82 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 136 | 115 | 21 |
| | மொத்தம் | 427 | 312 | 115 |

**(ஆ) ஏனைய தரப்பினர்கள் பெற்றுக்கொண்ட மனித வளங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்குச் சமர்பித்த தகவல்களின் பிரகாரம் ஆயுதப்படை உத்தியோகத்தர்கள் 53 பேரும் ஏனைய உத்தியோகத்தர்கள் 266 பேரும் அமைச்சின் கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள்.

(ii) மீளாய்வாண்டின் ஒரு அதிகாரசபையைச் சார்ந்த 08 ஊழியர்கள், பாதுகாப்பு மேற்பார்வையாளர் ஒருவர், பாதுகாப்பு கட்டளை உத்தியோகத்தர் 07 பேர் ஆகியோர் பாதுகாப்பு அமைச்சின் கடமைகளுக்கான ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.